அவர்கள், திருச்சிராப்பள்ளி மருத்துவமனையில் இருக்கின்ற மின்தூக்கி சரியாக இயங்கவில்லை என்று சொன்னார்கள். நானும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும் அண்மையில் அங்கு ஆய்விற்குச் சென்றபோது அந்த lift–ல்தான் சென்றோம். நன்றாகத்தான் இயங்கியது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள் செல்லும்போது, ஏதோ stuck ஆகியிருக்கிறது. *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Weight தாங்காமல் இருந்திருக்கும்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு உறுப்பினருடைய உடல் பருமன் காரணமாக இருக்கலாம். இன்னொன்றும் சொல்லியிருக்கிறார். தாய்–சேய் நல மருத்துவமனை தூரத்தில் இருக்கிறது; ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த இடத்திற்கே மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அடுத்த முறை, நாங்கள் திருச்சிராப்பள்ளிக்குச் செல்கிறபோது, அந்த மருத்துவமனையை ஆய்வு செய்து, தேவைப்படுமானால், அவர் சொல்வதைப்போல மாற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், எல்லோருக்கும் பதில் சொல்வதனால், நிறைய உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறீர்கள். காலத்தின் அருமை கருதி, வினாக்கள்–விடைகள் நேரம் இத்துடன் முடிவு பெறுகிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கள்ளக்குறிச்சி நகராட்சி, தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கள்ளக்குறிச்சி நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள், விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு

அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், இளைஞரணிச் செயலாளர் அவர்களையும் வணங்குகின்றேன். 45,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து என்னை இரண்டாவது முறையாக இம்மாமன்றத்திற்கு அனுப்பிய ரிஷிவந்தியம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கள்ளக்குறிச்சி நகராட்சியானது 1,10,000 மக்கள் தொகை கொண்ட முதல்நிலை நகராட்சியாகும். இதனை தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்திட மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சியானது, அரசாணை (நிலை) எண் 304, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11-06-2004-ன்படி, பேரூராட்சியிலிருந்து நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. பின்னர், அரசாணை (நிலை) எண் 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9-8-2010-ன்படி முதல்நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டு, தற்போது முதல்நிலை நகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. அரசாணை நிலை எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30-8-2019-ன்படி, ரூ.6 கோடி முதல் ரூ.9 கோடிக்கு மிகாமல் சராசரி ஆண்டு வருமானம் உள்ள நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகளாகவும், ரூ.9 கோடிக்கு மேல் ரூ.15 கோடிக்கு மிகாமல் சராசரி ஆண்டு வருமானம் உள்ள நகராட்சிகள் தேர்வுநிலை நகராட்சிகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

[திரு. கே.என். நேரு] [2021 செப்டம்பர் 1

இந்நிலையில் கள்ளக்குறிச்சி நகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக உள்ள சராசரி ஆண்டு வருமானம் உரிய முறையில் கணக்கிடப்பட்டு, சராசரி ஆண்டு வருமானம் ரூ.9 கோடிக்கு மேல் இருக்கும்பட்சத்தில், கள்ளக்குறிச்சி நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மதுரை, நாராயணபுரம், நான்குவழி உயர்மட்டச் சாலை கட்டுமானப் பணியின்போது நிகழ்ந்த விபத்து, உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை–புதுநத்தம் சாலையில், நாராயணபுரத்தில் நடைபெறும் பறக்கும் மேம்பால கட்டுமானப் பணிகளின்போது நடந்த விபத்து குறித்து விவாதிக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. கு. சின்னப்பா, திரு. A.R.R. ரகுராமன், திரு. மு. பூமிநாதன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள்.

திரு. மு. பூமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தல்லாகுளத்திலிருந்து ஊமச்சிகுளம் வரை ஒன்றிய அரசால் சுமார் ஏழரை கிலோ மீட்டர் தூரத்திற்குக் பறக்கும் பாலம் கட்டப்படுகிறது. 28–8–2021 அன்று நாராயணபுரம் ஐயர் பங்களாவிற்கு இடையே பாலத்தின் தூண்மீது கான்கிரீட் பூசும் பணி நடந்து வந்தது. ஹைட்ராலிக் இயந்திரம் பழுதடைந்ததால், கிரேன்மூலம் அந்தப் பணிகள் நடைபெற்றன. அப்போது 120 டன் எடைகொண்ட girder–ஐ கிரேன்மூலம் தூக்கும்போது விழுந்ததால் உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த ஆகாஷ் என்ற தொழிலாளி இறந்திருக்கின்றார். பொறியாளர்களின் சரியான கண்காணிப்பு இல்லாத காரணத்தினால் இந்த விபத்து நடந்திருக்கின்றது.